# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

**ஆணை எண்.42/ந/2026, நாள் 24.04.2026**

த. சுயம்புராஜ்,
திட்டக்குடி, – முறையீட்டு மனுதாரர்
கடலூர்.

நகராட்சி ஆணையர்,
திட்டக்குடி நகராட்சி, – எதிர்மனுதாரர்
கடலூர் மாவட்டம்.

கடலூர் மாவட்டம், திட்டக்குடி, கே.எஸ்.ஆர் நகர், கே.எஸ்.ஆர் வாள்பட்டறை என்கிற முகவரியில் வசிக்கும் திரு. த. சுயம்புராஜ், என்பவரது 17.12.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 24.12.2025 அன்று பெறப்பட்டு, 42/ந/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கடலூர் மாவட்டம், திட்டக்குடி, கே.எஸ்.ஆர் நகர், கே.எஸ்.ஆர் வாள்பட்டறை என்கிற முகவரியில் வசிக்கும் திரு. த. சுயம்புராஜ், என்பவரது 17.12.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

“கடலூர் மாவட்டம் திட்டக்குடி வட்டம் திட்டக்குடி நகராட்சிக்கு சொந்தமான பொதுத்தெரு 1922ம் ஆண்டு Filed no 57 சர்வே எண். 123ல் ஆக்கிரமிப்புகளை பொது நலம் கருதி அகற்றி பொது தெரு ஆன பொது சொத்தினை பாதுகாக்க வேண்டி பொதுத் தெருவில் உள்ள சட்ட விரோதமான ஆக்கிரமிப்புகள் பொதுமக்களுக்கு தொல்லையாக இருப்பதால் அதனை அகற்ற வேண்டும். மேற்படி பொதுத் தெருக்களில் வழங்கப்பட்டுள்ள சட்ட விரோதமான பட்டாக்களை ரத்து செய்ய வேண்டும். இந்த முக்கிய பொது தெருக்களில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க தகுந்த ஏற்பாடுகள் செய்வதற்கும் பொது மக்களின் பாதுகாப்பு கருதியும் சட்ட விரோதமான ஆக்கிரமிப்புகள் பொது மக்களுக்கு தொல்லையாக உள்ளதால் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். மேற்படி தெருக்களில் சட்ட விரோதமாக வழங்கப்பட்டுள்ள பட்டாக்களை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஊர் நல்லா இருக்க வேண்டும் என்பதற்காகவும் ஊர் மக்கள் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காகவும் பொது தெருக்களில் தொல்லையாக உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி தருமாறு கேட்டுக்கொள்கிறோம். மேற்படி முக்கிய பொது தெருக்களில் ஆக்கிரமிப்பு காரர்களுக்கு சட்டத்திற்கு புறம்பாக வழங்கப்பட்ட பட்டாக்களை ரத்து செய்ய வேண்டும். மேற்படி 1922ஆம் ஆண்டின் Filed no 57 சர்வே எண். 123ல் ஆன இந்த முக்கிய பொதுத் தெருக்களில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கத் தகுந்த ஏற்பாடுகள் செய்வதற்கும் பொது மக்களின் பாதுகாப்பு கருதியும் பொதுமக்கள் எதிர்கால நலன் கருதியும் இந்த

பொது தெருக்களில் உள்ள சட்ட விரோதமான ஆக்கிரமிப்புகள் பொது மக்களுக்கு தொல்லையாகவும் போக்குவரத்திற்கு இடையூராகவும் உள்ளதால் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். மேற்படி தெருக்களில் சட்ட விரோதமாக வழங்கப்பட்டுள்ள பட்டாக்களை ரத்து செய்ய வேண்டும். மேலும் பொது தெருக்களை பொது மக்களின் பயன்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும் என்று ஊர் பொதுமக்கள் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரது புகார் குறித்து திட்டக்குடி நகராட்சி ஆணையரிடம் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 17.02.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3.திட்டக்குடி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.253/2026/எப்1 நாள் 16.03.2026–ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்ட விளக்கம் அளித்துள்ளார்.

"மேற்படி மனுவின் மீது நேரடி கள ஆய்வு செய்யப்பட்டது. புல எண்.123ல் கிராம நிர்வாக அலுவலரின் பதிவேட்டின்படி பொது சாலையாக உள்ளதை பொதுமக்கள் போக்குவரத்திற்கு பயன்படுத்தி வருகின்றனர். மேற்படி பொதுத்தெரு அமையப்பெற்றுள்ள புல வரைபடத்தில் ஏதேனும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தால் அதன் விவரத்தினை அத்து அளந்து அறிக்கை வழங்கிட கோரி திட்டக்குடி நகராட்சி அலுவலக கடிதம் நாள் 06.03.2026 மூலம் வருவாய் வட்டாட்சியர், திட்டக்குடி அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. உரிய அறிக்கை வரப்பெற்றவுடன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என பணிந்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. அதன் விவரத்தினை திட்டக்குடி நகராட்சி அலுவலக கடிதம் நாள் 07.03.2026ல் காணும் கடிதம் வாயிலாக மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரரின் புகார் தொடர்பாக மனுதாரரையும், எதிர்மனுதாரரான திட்டக்குடி நகராட்சி ஆணையரையும் 09.04.2026 அன்று இம்முறை மன்ற நடுவத்தில் நடைபெறும் விசாரணையில் கலந்து கொள்ளுமாறு 25.03.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு. த. சுயம்புராஜ் மற்றும் அவரது வழக்கறிஞர் D.அருள்நிதி ஆகியோர் 09.04.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை அளித்துள்ளனர். அதில்–

"கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், திட்டக்குடி நகராட்சிக்கு சொந்தமான 1922ம் ஆண்டு தெரு சர்வே Filed no 57 தேர்முட்டி தெரு, சர்வே எண். 123ல் பொதுத்தெருவில் உள்ள சட்ட விரோதமான ஆக்கிரமிப்புகளை இதுநாள் வரை அகற்றப்படவில்லை. மேலும் மேற்படி இடத்திற்கு வழங்கப்பட்ட போலி பட்டாக்களை ரத்து செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறோம். மேற்படி இடத்திற்கான பட்டா போலிதான் என்பதற்கு உரிய ஆவணங்களான ExA 1– திட்டக்குடி கிராமத்தின் 1922ம் ஆண்டின் தெரு சர்வே Filed No. 57 (தற்பொதைய சர்வே எண்.123 தெரு) (2) ExA 2 – 1922ம் ஆண்டின் புல எண்.64ல் தேர்முட்டி தெருவினை காட்டும்படியான விளக்கம், மற்றும் (3) ExA 2 – திட்டக்குடி பஞ்சாயத்தின் தெருக்களை காட்டும் தெரு வரைபடம் Street Survey Map ஆகியவற்றின் நகல்களை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளோம். இந்த தெரு ஆக்கிரமிப்பினால் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ளது. மேலும் இந்த ஆக்கிரமிப்புகளால் விபத்து ஏற்படுகின்றது. இந்த பொது சொத்தினை மீட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்று இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்." என தெரிவித்துள்ளனர்.

6) திட்டக்குடி நகராட்சி ஆணையரின் கடித ந.க.எண்.253/2026/எப்1 நாள் 02.04.2026–ல் கண்டுள்ள கடிதத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் கடலூரில் 2026 சட்டமன்ற பொதுத் தேர்தல் தொடர்பான ஆய்வு கூட்டத்தில் கலந்து கொள்ள உள்ளதால் ஆணையர் சார்பாக திட்டக்குடி நகராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு. பா. அருண்குமார் என்பவர் உரிய ஆவணங்களுடன் நேரில் வருகை தந்து விவரம் தெரிவிப்பார் என தெரிவிக்கப்பட்டதைத்தொடர்ந்து

திட்டக்குடி நகராட்சி இளநிலைஉதவியாளர் 09.04.2026 அன்றைய விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார். அதில் –

"திட்டக்குடி நகராட்சி கிராம புல எண்.123ல் உள்ள பொதுத்தெருவினை சட்ட விரோதமாக சிலர் ஆக்கிரமித்து கட்டிடம் கட்டியுள்ளதால், மேற்படி இடம் கள ஆய்வு செய்யப்பட்டு, கிராம நிர்வாக அலுவலரின் பதிவேட்டின்படி அது பொது சாலையாக உள்ளது எனவும் பொதுமக்கள் போக்குவரத்திற்கு பயன்படுத்தி வருகின்றனர்.

மனுதாரரின் புகார் தொடர்பாக திட்டக்குடி வருவாய் வட்டாட்சியருக்கு 06.03.2026 அன்று திட்டக்குடி நகராட்சியினால் கடிதம் அனுப்பப்பட்டு, மேற்படி இடத்தில் ஆக்கிரமிப்பு ஏதேனும் செய்யப்பட்டிருந்தால் அளந்து விவர அறிக்கை வழங்கிட கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து 27.03.2026 அன்று நினைவூட்டுக்கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அறிக்கை கிடைக்கப்பெற்றதும் அதன் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரம் இம்முறைமன்ற நடுவத்தில் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

மேலும் மேற்படி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படும் இடத்தினை வருவாய்த்துறை அதிகாரிகள் கள ஆய்வு செய்து அறிக்கை பெறப்பட்டவுடன் தொடர்நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று இம்முறைமன்ற நடுவத்தில் பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறேன்". என தெரிவித்துள்ளார்.

7) மேலும் திட்டக்குடி நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க.எண்.253/2026/எப்1, 16.03.2026–ல் தெரிவித்துள்ளதையே, தனது கடிதம் ந.க.எண்.253/2026/எப்1, 06.04.2026–லும் தெரிவித்துள்ளார்.

8) மனுதாரரின் புகார்மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான திட்டக்குடி நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சியின் இளநிலை உதவியாளரின் வாக்குமூலம், மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், திட்டக்குடி நகராட்சிக்கு சொந்தமான பொதுத்தெரு 1922ம் ஆண்டு Filed No. 57, சர்வே எண். 123ல் உள்ள பொதுத் தெருக்களில் வழங்கப்பட்டுள்ள சட்ட விரோதமான பட்டாக்களை ரத்து செய்ய வேண்டும் என்றும், மேற்படி 1922ஆம் ஆண்டின் Filed No. 57 சர்வே எண். 123ல் ஆன இந்த முக்கிய பொதுத் தெருக்களில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க, பொது தெருக்களை பொது மக்களின் பயன்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும் என்று ஊர் பொதுமக்கள் சார்பாக கேட்டுக்கொள்கிறேன் எனவும் மேற்படி இடத்திற்கான பட்டா போலிதான் என்பதற்கு உரிய ஆவணங்களான ExA 1– திட்டக்குடி கிராமத்தின் 1922ம் ஆண்டின் தெரு சர்வே Filed No. 57 (தற்பொதைய சர்வே எண்.123 தெரு) (2) ExA 2 – 1922ம் ஆண்டின் புல எண்.64ல் தேர்முட்டி தெருவினை காட்டும்படியான விளக்கம், மற்றும் (3) ExA 2 – திட்டக்குடி பஞ்சாயத்தின் தெருக்களை காட்டும் தெரு வரைபடம் Street Survey Map ஆகியவற்றின் அடிப்படையில் இந்த பொது சொத்தினை மீட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்று இம்முறைமன்ற நடுவத்தை மனுதாரர் நாடியிருப்பது அவரது மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

திட்டக்குடி நகராட்சி, கிராம புல எண்.123ல் உள்ள பொதுத்தெருவினை சட்ட விரோதமாக சிலர் ஆக்கிரமித்து கட்டிடம் கட்டியுள்ளதால், மேற்படி இடம் கள ஆய்வு செய்யப்பட்டு, கிராம நிர்வாக அலுவலரின் பதிவேட்டின்படி அது பொது சாலையாக உள்ளது எனவும் பொதுமக்கள் போக்குவரத்திற்கு பயன்படுத்தி வருகின்றனர் என்பதும், மேலும் மேற்படி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படும் இடத்தினை வருவாய்த்துறை அதிகாரிகள் கள ஆய்வு செய்து அறிக்கை பெறப்பட்டவுடன் தொடர்நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பது திட்டக்குடி நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி இளநிலை உதவியாளரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

இந்நேர்வில் திட்டக்குடி நகராட்சி, கிராம புல எண்.123–ல் உள்ள பொதுத்தெருவினை திட்டக்குடி வருவாய் வட்டாட்சியருடன் இணைந்து கள ஆய்வு மேற்கொண்டு புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு

ஆக்கிரமிப்பு ஏதேனும் செய்யப்பட்டிருந்தால், 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி விதிகள், 2023ல் தெரிவிக்கப்பட்டுள்ள ஷரத்துக்களுக்கு உட்பட்டு உரிய தொடர் நடவடிக்கையை மேற்கொள்ள திட்டக்குடி நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 24–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. த. சுயம்புராஜ்,
த/பெ. திரு.கே.எஸ்.ஆர். தங்கராசு
K.S.R. வாள்பட்டறை,
K.S.R. நகர், திட்டக்குடி – 606 106,
கடலூர் மாவட்டம்.

2) நகராட்சி ஆணையர்,
திட்டக்குடி நகராட்சி,
கடலூர் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.